[*2018 ஜூன் 26*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினாக்கள்—விடைகள் நேரம் முடிவுற்றது.*

[குறிப்பு: *ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]*

2. தகவல் கோரல்

அமைச்சரவைக் கூட்ட அறையில் அவை நடவடிக்கைகளைப் பார்க்கும் வசதியைப் போன்று எதிர்க்கட்சித் தலைவர் மற்றும் அமைச்சர்கள் அறைகளிலும் செய்யக் கோருதல் குறித்து

திரு. துரைமுருகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,* . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர், சிறிது நேரம் இருங்கள். அரசினர் தனித் தீர்மானம் வருகிறது. (குறுக்கீடு) சரி, பேசுங்கள்.*

***திரு. துரைமுருகன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே இந்தச் சபையில் தங்களிடத்திலே ஒருமுறை கேட்டேன். Officers எல்லாம் எங்கே என்று கேட்டேன். அதற்குத் தாங்கள் பக்கத்தில் உள்ள அறையில் இருக்கிறார்கள். அங்கு T.V. வைத்திருக்கிறேன். அதில் அவர்கள் பார்க்கிறார்கள் என்று சொன்னீர்கள். இந்த அவையைத் தவிர அவையின் நடவடிக்கை குறித்த படப்பிடிப்புகள் எல்லாம் எங்கும் போகக் கூடாது என்று நான் சொன்னேன். இப்போது உங்களது உத்தரவின்பேரில், அங்கு T.V. வைக்கப்பட்டிருப்பதாக நான் அறிகிறேன். உங்கள் உத்தரவில் நான் தலையிடவில்லை. உங்களுக்கு அதிகாரம் இருக்கிறது.*

ஆக, இங்குள்ள பக்கத்து அறையில் Cabinet meeting நடக்கும் அறையில் T.V. வைக்கப்பட்டிருப்பதால் அங்கு அவை நடவடிக்கைகளை அதிகாரிகள் எல்லாம் பார்க்கிறார்கள் அல்லவா? அப்படியென்றால், உங்களுடைய அதிகாரத்தைப் பயன்படுத்தி, எங்கள் எதிர்க்கட்சித் தலைவர் அவர்களின் அறையிலும் T.V. வைத்து படம் பார்க்க வசதி செய்யவேண்டும். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறையில் இருக்கிறதோ இல்லையோ?

2018 ஜூன் 26] *[திரு. துரைமுருகன்]*

அவருக்கும் சேர்த்து நான் கேட்கிறேன். இல்லையென்றால் அனைத்து மாண்புமிகு அமைச்சர்களின் அறையிலும் T.V. *வைத்து காட்ட வேண்டும். அது என்ன உங்கள் அதிகாரத்தைப் பயன்படுத்தி அங்கே அதிகாரிகளுக்கு மட்டும் காட்டுகிறீர்கள்.* **

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *இது குறித்த வழக்கு நீதிமன்றத்தில் இருக்கிறது. அதுபற்றி விவாதம் வேண்டாம்.*

திரு. துரைமுருகன்: *நீதிமன்றத்தில் வழக்கு இருக்கின்றபோது, அங்கே மட்டும் எப்படி நீங்கள் வைத்தீர்கள்?*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *நீதிமன்றத்தில் வழக்கு இருக்கிறது. அதுபற்றி விவாதம் வேண்டாம்.*

திரு. துரைமுருகன்: *நீங்கள் நினைத்தால் அதிகாரத்தைப் பயன்படுத்துவீர்கள்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பொதுமக்கள் மற்றும் மற்ற* T.V.*–க்களுக்கு கொடுப்பது என்பது வேறு. (குறுக்கீடு) மற்ற* T.V. *–க்களுக்கு கொடுப்பது என்பது வேறு. என்னுடைய ஆளுகைக்கு உட்பட்ட இடத்தில் வைக்க, நான் முடிவு செய்வது என்பது வேறு.*

திரு. துரைமுருகன்: *அதை நான் ஒத்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *சிறிதுநேரம் இருங்கள். (குறுக்கீடு) நான் இதுகுறித்து ஏற்கெனவே இந்த அவையில் பதில் சொல்லிவிட்டேன். இருந்தாலும் மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் கேட்கிறீர்கள்.* Officers Gallery. . .

திரு. துரைமுருகன்: Officers Gallery full *ஆகிவிட்டது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: Officers Gallery*–ல் அதிகாரிகள் நிறையபேர் வருவார்கள். (குறுக்கீடு) நிறைய பேர் வருகின்ற காரணத்தினாலே, மானியக் கோரிக்கையில் மாண்புமிகு அமைச்சர்களுக்கு உதவி செய்வதற்காக, அவர்கள் அவ்வப்போது குறிப்புகள் தரவேண்டிய சூழ்நிலை இருக்கிறது. இங்கே* Officers Gallery*–ல் உள்ள இடம் சிறியதாக இருக்கிறது. (குறுக்கீடு) அதனால் நான் ஒரு தற்காலிக ஏற்பாடாக, அதிகாரிகள் இங்கேயே, இந்த வளாகத்திலேயே இருக்க வேண்டுமென்ற காரணத்தினால்*

** *மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.*

அந்த அறையிலேயே அவை நடவடிக்கைகளைக் காண ஏற்பாடு செய்திருக்கிறேன். அவை நடக்கும் சமயத்தில்தான் அங்கே T.V.–யை வைத்து அவை நடவடிக்கையின் விவரங்கள், மாண்புமிகு அமைச்சர்கள் திடீரென்று ஏதாவது விவரங்கள் கேட்டால் அவர்களுக்குத் தெரிய வேண்டும் என்று ஏற்பாடு செய்திருக்கிறேன். ஆகவே, இந்த ஏற்பாடு தற்காலிகமான ஏற்பாடுதான்.

திரு. துரைமுருகன்: அதை நான் ஒத்துக்கொள்கிறேன். அற்புதமான idea Sir உங்களுடையது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவை முடிந்த பின்னர் அங்கு T.V. இருக்காது. அது Cabinet Room.

திரு. துரைமுருகன்: நீங்கள் அவர்களுக்கு வசதி செய்து கொடுத்திருக்கிறீர்கள். நான் அதைப் பாராட்டுகிறேன். நான் என்ன சொல்கிறேன் என்று கேட்டால், மாண்புமிகு முதலமைச்சர் முதல் அனைத்து மாண்புமிகு அமைச்சர்களின் அறைகளிலும் அதுபோல ஏற்பாடு செய்யவேண்டும். ஏனென்று கேட்டால் அவர்கள் அங்கே உட்கார்ந்திருப்பார்கள். திடீரென்று அவைக்கு அவர்கள் ஓடி வரவேண்டியிருக்கும். அதனால் உங்களுக்கும், எங்களுக்கும் T.V. வைக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை. நான் சொல்வதைக் கேளுங்கள்.

திரு. துரைமுருகன்: Parliament–ல்கூட அப்படித்தான் வைத்திருக்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: Parliament–ல் இருப்பது Assembly–ல் இருக்காது; Assembly–ல் இருப்பது Parliament–ல் இருக்காது.

திரு. துரைமுருகன்: அங்கிருப்பது இங்கு இருக்காது, இங்கு இருப்பது அங்கு இருக்காது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் கேட்பது போல், என்னுடைய ஆளுகைக்கு உட்படாத இடத்தில், மாண்புமிகு அமைச்சர்களின் அறைகளில் எல்லாம் என்னால் அதைக் கொண்டுபோய் வைக்க முடியாது. அந்தமாதிரி எல்லாம் செய்வது முறையல்ல. (குறுக்கீடு) அதற்கு வாய்ப்பும் இல்லை.

2018 ஜூன் 26]

திரு. துரைமுருகன்: *அப்படியானால் மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களின் அறை உங்கள் ஆளுகையின்கீழ்தானே வருகிறது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்கு மட்டும் நான் கொடுத்தால், மாண்புமிகு அமைச்சர்களுக்கும் கொடுக்க வேண்டியிருக்கும். ஆகவே, அந்த வசதியைச் செய்து கொடுப்பதில்லை. அந்த வாய்ப்பு இல்லை. ஏனென்றால் அந்த அறையில் நான் பார்த்து* restrict *செய்ய வேண்டியிருக்கிறது.*

திரு. துரைமுருகன்: *உங்கள் பெருந்தன்மையை நான் பாராட்டுகிறேன். நான் சொல்வதெல்லாம் அவை நடவடிக்கையை* free *ஆக்கிவிடுங்கள் என்று சொல்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்கும், மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்களுக்கும் அவ்வாறு அளிக்க வாய்ப்பு இருந்தால் நான் நிச்சயமாகத் தருவதற்குத் தயங்க மாட்டேன். அப்படியொரு வாய்ப்பு எனக்கு இல்லை.*

திரு. துரைமுருகன்: *அப்படி ஒரு நெருக்கடி உள்ளது. அந்த வாய்ப்பை நீங்கள்* create *பண்ணுங்கள்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அப்படி ஒரு சூழ்நிலை இருக்கிறது. எனவே, அதுகுறித்து நீங்கள் வற்புறுத்த வேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன். மேலும், நீதிமன்றத்தில் இருக்கின்ற பிரச்சினைகளையெல்லாம் நீங்கள் பேச வேண்டாம். எனவே அதை விட்டுவிடுங்கள் என்று கேட்டுக்கொள்கிறேன். இப்போது நாம் அடுத்த* agenda*–விற்குச் செல்லலாம். எனவே, நீங்கள் உட்காருங்கள்.*

முற்பகல் 11–40

3. அரசினர் தனித் தீர்மானம்

மத்திய அரசின் 2018 ஆம் ஆண்டைய அணை பாதுகாப்பு வரைவு மசோதாவை மாநிலங்களைக் கலந்தாலோசித்து ஒருமித்த கருத்து ஏற்படும்வரை நிறைவேற்றாமல் நிறுத்தி வைக்கக்கோரும் தீர்மானம்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *நேற்று மதியம் அவை நடந்துகொண்டிருக்கையில், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்*